<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

ஆர்சிஓபி 6/2014

ம.சா.1– சந்தோஷ்

<u>01.11.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) ம.சா.ஆ.18 புகைப்படத்தில் உள்ள சொத்துக்கள் மனுச் சொத்துக்கள் அல்ல என்றால் சரிதான். ம.சா.ஆ.18 போட்டோ பிரிண்ட் கிடையாது என்றால் தவறு. எதில் இருந்து எடுக்கப்பட்டது என்றால் என்னுடைய " ஐ " போனில் எடுத்தேன். ம.சா.ஆ.18 புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்ற குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முதல் நாள் எடுத்தேன். ம.சா.ஆ.18 ஆவணத்தில் எடிட், அட்ஜஸ் எனச் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் எதுவும் அப்படி செய்யவில்லை.

2) ம.சா.ஆ.18 புகைப்படம் எடுக்கப்பட்ட பென் டிரைவ்–ன் நகல் எதிர்மனுதாரருக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.18 க்கும் மனுவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 7.10.2023 ம் தேதி தான் ம.சா.ஆ.18 ஐ பொறுத்து நான் விசாரணை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். எழுத்துப்பூர்வமான முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முந்தைய தேதி புகைப்படம் எடுக்கப்பட்டது. 19.07.2023 ம் தேதிக்கு முந்தைய தேதி எடுக்கப்பட்டதா என்றால் ஆமாம்.

3) ம.சா.ஆ.18 ல் 15.02.2023 என்று உள்ளது என்றால் சரிதான், அன்று தான் புகைப்படம் எடுத்தேன். முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து, குறுக்கு விசாரணை செய்த பிறகு மனுவிற்காக ம.சா.ஆ.18 ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்திய சாட்சிய சட்டம் 65 பி(4)ன்படி முறையான சான்றிதழ் இல்லாமல் ம.சா.ஆ.18 புகைப்படம் மற்றும் பென் டிரைவ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>அனுமதியுடன் மறு விசாரணை</u>**

ம.சா.ஆ.18 புகைப்படத்திலுள்ள சொத்து 1 ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது.

**<u>அனுமதியுடன் மறு குறுக்கு விசாரணை</u>**

அந்த சொத்து 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. மனுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/- K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.